**தலைப்பு 203 - கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் திணைக்களத் தலைவர் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தில் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

தலைப்பு 203 – கிறிஸ்தவ சமய அலுவலகள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 30 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர்க்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தில் கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களில் பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | அவதானிப்பு உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | செயல்நடவடிக்கைத் திட்டம் துல்லியமாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | 2.1 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஐ) | அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுங்கு, நேர்மை, ஆகிய விடயங்கள் தொடர்பாக முறையாக கவனம் செலுத்தி தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | முகாமைத்துவ பலவீனங்கள் | 2.2 |
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தராக அவர் பொறுப்பாகக் காணப்படுகின்ற செலவினத் தலைப்பொன்றின் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் நிதி வருடத்தின் இறுதியில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு ஒதுக்கீட்டுக் கணக்கொன்று வழங்கப்பட்டுள்ளது. | மேலதிக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை | 2.6(ஆ) |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, மீளாய்வாண்டில் திணைக்களத்தினால் 37 பிரதான பாத்திரங்கள் நிறைவேற்றுக் காணப்பட்டன. எவ்வாறாயினும், எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளினைப் பெற்றுக்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கை திட்டத்தில் தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளில், எதிர்ப்பார்க்கப்பட்ட வெளியீடு/விளைவு மதிப்பிடப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மறைமவாட்ட போராயர்களின் மறை ஆசிரியர்களின் துல்லியமான அளவுசார் தகவல்களினை சமர்ப்பிப்பதற்கு தவறியமை காரணமாக மறை ஆசிரியர்களினுடைய படிகளின் செலுத்துகைக்கு அளிக்கப்பட்ட பணம் சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பைபிள் மறை அறிவிற்கான ஆங்கில மொழி தேசிய போட்டியினை நடாத்துகையில், கொழும்பு மறைமாவட்டத்திற்கு வழங்கப்பட்ட போட்டி விதிகளில் காணப்பட்ட வலுவொன்று காரணமாக முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் வெற்றியாளர்களுக்கு சமமான புள்ளிகள் மற்றும் சமமான பரிசுகள் வழங்க வேண்டியிருந்தது.

(இ) பைபிள் மறை அறிவு போட்டிக்கு மறைமாவட்டங்களுக்கு அளிக்கப்பட்ட பணத்தில் கொழும்பு மற்றும் இரத்தினபுரி ஆகிய 2 மறைமாவட்டங்களுக்கு மதிப்பிப்பட்ட பணத்தை மிகைத்து ரூபா 41,721 தொகையொன்று அளிக்கப்பட்டிருந்தது.

## 2.3 கடமைகளினை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் பயன்பாடு

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 வருடங்கள் காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் தகவல்கள் மற்றும் பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | செலவினத்தின் வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | தேறிய ஏற்பாட்டின் சதவீதமொன்றாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | |
| 2013 | மீண்டெழும் | 81.40 | 61.23 | 20.17 | 24.78 |
| | மூலதனம் | 30.00 | 26.94 | 3.06 | 10.20 |
| | **மொத்தம்** | **111.40** | **88.17** | **23.23** | **20.85** |
| 2014 | மீண்டெழும் | 126.77 | 123.63 | 3.14 | 2.48 |
| | மூலதனம் | 21.84 | 21.29 | 0.55 | 2.52 |
| | **மொத்தம்** | **148.61** | **144.92** | **3.69** | **2.48** |
| 2015 | மீண்டெழும் | 125.28 | 123.04 | 2.24 | 1.79 |
| | மூலதனம் | 24.22 | 23.51 | 0.71 | 2.93 |
| | **மொத்தம்** | **149.50** | **146.55** | **2.95** | **1.97** |
| 2016 | மீண்டெழும் | 152.27 | 137.91 | 14.36 | 9.43 |
| | மூலதனம் | 24.10 | 21.83 | 2.27 | 9.42 |
| | **மொத்தம்** | **176.37** | **159.74** | **16.63** | **9.43** |
| 2017 | மீண்டெழும் | 187.08 | 159.98 | 27.10 | 14.4 |
| | மூலதனம் | 57.77 | 49.44 | 8.34 | 14.4 |
| | **மொத்தம்** | **244.85** | **209.42** | **35.44** | **14.4** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) ஒதுக்கீட்டு கணக்கு

**மேற்கொள்ளப்பட்ட மிகை ஏற்பாடுகள்**

திணைக்களத்தினால் 2 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 4 மூலதன விடயங்களினை நிறைவேற்றுவதற்கு மொத்த தேறிய ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் காணப்பட்டமை மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் கட்டுநிதி கிடைக்கப்பெறாமை காரணமாக மொத்த ஏற்பாட்டை பயன்படுத்த முடியாதிருந்தது. ஆகையினால், தேறிய ஏற்பாட்டில் சேமிப்புக்கள் ரூபா 8,369,541 தொகையாக அல்லது தேறிய ஏற்பாட்டின் 12 சதவீதம் தொடக்கம் 86 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

## 2.4 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்தின் 20301 விடய ஆம் இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்கு பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுகைகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 3.00 | 2.10 | 0.70 | 0.94 | 10.00 | 4.91 |

## 2.5 மனித வளங்கள் முகாமைத்துவம்ள

### 2.5.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் தனிநபர் ஊதியங்கள் மீதான செலவினங்கள்

2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கடமைகளினை வெளிப்படுத்துவதற்கு 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர், வெற்றிடங்கள் மற்றும் மிகை பதவியணியினர் தொடர்பிலான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்கான தனிநபர் ஊதியங்களின் செலவின விடயத்திற்கு ரூபா 19 மில்லியன் தொகையொன்று திணைக்களத்திற்கு ஏற்பட்டது. அதற்கமைய, மூலதனச் செலவினம் ரூபா 475,000 ஆகக் காணப்பட்டிருந்தது.

| | ஊழியர்கள் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்டமட்டம் | 03 | 02 | 01 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 01 | - | 01 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 55 | 34 | 21 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 07 | 04 | 03 |
| | மொத்தம் | 66 | 40 | 26 |